சுதந்திரப் போராட்ட வீராங்கனை
வீரப்பேரரசி, வீரமங்கை
வேலு நாச்சியார் அவர்களின்
296 வது பிறந்தநாள் 03.01.2026

ஆங்கிலேயர் ஆட்சிக்குத் தலை வணங்காத தன் கணவர், சிவகங்கை அரசர் (1750 – 1772 வரை 22 ஆண்டுகள் ஆண்ட) முத்துவடுக நாத பெருவுடையார் அவர்களை வெள்ளையர்களின் சூழ்ச்சியால் காளையார் கோவிலில் கொல்லப்பட்ட பிறகு பிரிட்டிஷ், ஆட்சியின் வசம் இருந்த சிவகங்கை நாட்டை, எட்டு ஆண்டுகால, போருக்குப் பின்னால் மீட்டு, மீண்டும் பேரரசியாக அமர்ந்தவர் வீரமங்கை வேலுநாச்சியார்.

அவருக்கு சென்னை காந்தி மண்டபத்தில் தமிழ்நாடு அரசு சார்பாக திருஉருவச்சிலை அமைத்து, 19.09.2025 அன்று திறந்து வைத்து, வேலூர் காவலர் பயிற்சி நிலையத்திற்கு வேலுநாச்சியார் பெயர் சூட்டியதற்கும், மதுரை சிவகங்கை மேம்பாலத்திற்கு வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் பெயர் சூட்டியதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலின்

அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

வேலுநாச்சியார் காலத்திற்கு 250 ஆண்டுகளுக்குப்பின் அவரின் வழி வழி வழித்தோன்றல்களான, எங்களையும் 07.12.2025 அன்று மதுரையில் நடந்த வேலுநாச்சியார் பாலத்திறப்பு விழா மேடைக்கு அழைத்து எங்களுக்கு சிறப்பு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் அவரது புகழுக்கும் இன்னும் 250 ஆண்டுகளுக்கு பின்னும் எங்களது வழி வழி வழித்தோன்றல்கள் தங்களுக்கு நன்றியோடு இருப்பார்கள் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வேலுநாச்சியார் அவர்களின் 296–வது பிறந்தநாளான 03.01.2026 அன்று சென்னை, கிண்டி காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களின் திரு உருவச்சிலைக்கு மலர் தூவி மரியாதை செய்ய வருகை தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணைமுதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

வீரமங்கை ராணி வேலு நாச்சியாரின் வழித்தோன்றல்கள்...
முனைவர் Er. பிரபா நாச்சியார், Er. ஜெயஸ்ரீ நாச்சியார்,
Dr. மோகனா நாச்சியார், Er. சங்கீதா நாச்சியார் USA

இவர்களுடன் காரியாப்பட்டி, சித்தனேந்தல்
கூத்தன்சேதுபதி பால்ச்சாமி அக்ரிகணேசன்

திருவாரூர் மாவட்டம் கோவில்திருமாளத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி, திருவாரூர் மாவட்ட வேளாண் விற்பனை குழு முன்னாள் தலைவர் 102 வயது பெரியவர் கோ.தட்சிணாமூர்த்தி அவர்களை கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி கல்யாணம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் குடவாசல் ஒன்றிய குழு முன்னாள் துணை தலைவர் ஆலத்தூர் ஜி.ஆர். பாண்டியன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! மு.க.ராமகிருஷ்ணன் வரவேற்புரை!

புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம் இச்சடியில் துணை முதல்வர் பிறந்தநாள் பொதுக்கூட்டம்!

அமைச்சர்கள் கோவி.செழியன் - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் - டாக்டர் வை.முத்துராஜா - த.சந்திரசேகரன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, ஜன. 3 - துணை முதலமைச்சர். கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் 27.12.2025 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இச்சடி கடைவீதியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

'புதுக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் மு.க. இராமகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். மு. கலியமூர்த்தி, வைகோ. ராஜன், செ.அசோக் பாண்டியன் , புத்தாம்பூர் எம். சுப்பையா டாக்டர் மு.க. முத்துக்கருப்பன், ஏ.கலிய முத்து, வடவாளம் க. செ.மணிமாறன், செ.கலிய மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், பிற்பட்டுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா , முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கவிச்சுடர் கவிதைப்பித்தன், வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

நிகழ்வுகளில் மாவட்ட அவைத் தலைவர் அரு. வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் க.மதியழகன், எஸ்.எஸ்.கருப்பையா, மாநகர பொறுப்பாளர்கள் துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், திருவிடைமருதூர் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் செ. குறிஞ்சிவாணன், ஆர். ஆர்.சாமிநாதன், எம்.எம். பாலு, பூங்குடி எம்.சிவா, டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, வி.என்.எம்.பாலு, ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், பி.சின்னையா, சி.அரங்க நாயகம், முன்னாள் மக்கள் தொடர்பு அதிகாரி ரெ.மதியழகன், செ.ரமேஷ், ஜெயா சீனிவாசன், யு. குமாரவேல், டி.சுப்பிரமணியன், எஸ்.நாகராஜன், எம்.மாரிமுத்து, எஸ். ஆரோக்கியசாமி. ரேணுகா தேவி ராஜகோபால். ஏ.எஸ்.கருணாநிதி, ஆர். ரஜினி, த.தமிழ்ச்செல்வன், முள்ளூர் ஆதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

முடிவில் கரு.மாரிமுத்து ஆர்.அர்ச்சுணன், செ. கிருஷ்ணமூர்த்தி, ஏ.அன்பு லாசர் ஆகியோர் நன்றி கூறினார்கள்.